திருவிழாக் காலங்களில் ஏற்றப்படும் அலங்கார தீபம் அல்ல தி.மு.க.

உலக வரலாற்றில் மனிதகுல நாகரிகத்தின் சிகரமாகத் திகழ்ந்த தமிழினத்தின் கலை, கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றின் விழுமியங்கள் ஆரியர் வருகையால் வடவர் ஆதிக்கத்தால் சிதைக்கப்பட்டு புராண இதிகாசங்கள் பொய்யும் புரட்டுமாக புனையப்பட்டு அறியாமை இருள்சூழ்ந்த சமுதாயமாக தமிழ்ச்சமூகம் கட்டமைக்கப்பட்டது. அதன்படி ஆரியர்களின் சூதும், வஞ்சனையும் புராண இதிகாசங்களில் கருப்பொருளாகி அவர்களால் திட்டமிடப்பட்டு தமிழ் சமுதாயத்தின்மீது திணிக்கப்பட்டன. இதற்கான அரசியல் அதிகாரத்தை மன்னர்களை தங்கள் சூழ்ச்சியால் கைப்பாவைகளாக்கி அவர்களது கருத்துக்களை அரங்கேற்றினர். அவர்களின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதாரத் தேவைகளுக்காக ஆலயங்களை உருவாக்கி அவற்றில் அர்ச்சகர்களாகி அவர்களால் கற்பிதம் செய்யப்பட்ட சமஸ்கிருதம் மட்டுமே ஆண்டவனை அர்ச்சிக்க உகந்த மொழி என்றும், அவர்கள் கடவுளின் தூதுவர்கள் எனவும் கல்வியறிவற்ற கடைநிலையில் வாழ்ந்த தமிழ்மக்களை தன்வயப்படுத்தி நம்பவைத்தனர். ஆரியர்களின் கைப்பாவைகளாக செயல்பட்ட மன்னர்களை அவர்களின் கருத்துக்களுக்கு ஆதரவாக அரசாணையிட பணித்தார்கள்.

ஆரியர்களின் இந்த வஞ்சக நடவடிக்கை என்பது பல்லாயிரம் ஆண்டுகள் தொடர்ந்ததால் உலகம் சிறக்க வாழ்ந்த தமிழினம் அறியாமையில் சிக்கி, வறுமையில் வீழ்ந்து, மூடநம்பிக்கையில் மூழ்கியது. இவ்வாறு இருண்ட வாழ்க்கை இடைவெளியின்றி நூற்றாண்டுகளாக தொடர்ந்த நிலையில், அவர்களது இறப்பிற்குப் பின்னர் மோட்சத்திற்கு வழிகாட்டும் தூதுவர்கள் நாங்கள்தான் என ஆரியர்கள் நம்பவைத்து அறியாமையில் மூழ்கிய தமிழர்களை தங்கள் பக்கம் ஈர்த்தார்கள்.

ஆரியரின் அறிவுரையை கேட்காவிட்டால் நரகம் உறுதியென அச்சுறுத்தியதால் படிப்பறிவில்லாத பாமரமக்கள் ஆசிரியர் கூட்டத்திடம் அடிமைகளாக வாழத்தொடங்கினர். இந்தச் சூழ்நிலையில் அடித்தட்டு மக்களின் ஒட்டுமொத்த எதிர்ப்பும் வந்துவிடக் கூடாது என்பதற்காக ஆரியர்கள் வர்ணாசிரம தர்மத்தின் அடிப்படையில், பிறப்பால் மனிதர்களை பிரித்தாலும் சூழ்ச்சியைக் கையாண்டார்கள். அதன் உச்சகட்டமாக நான்காம் வர்ணமக்களான, "சூத்திரனுக்கு எதைக்கொடுத்தாலும் கல்வியை மட்டும் கொடுக்காதே" என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தனர். இதைத்தான் ஒரு முறை தமிழக சட்டமன்றத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது எதிர்க்கட்சி வரிசையில் இருந்த டாக்டர் ஹண்டே இது மூன்றாம் தர ஆட்சி என்று சொன்னார். அதற்குப் பதிலளித்த கலைஞர் இது நான்காம் தர ஆட்சி (சூத்திரர் ஆட்சி) என்று குறிப்பிட்டார்.

இத்தகைய இருண்டகால சுழற்சியில் பல்லாயிரம் ஆண்டுகள் கல்வி மறுக்கப்பட்ட மக்களாக தமிழக மக்கள் ஆரியர்களின் வஞ்சனையால், ஏழ்மையிலும், வறுமையிலும், அறியாமையிலும் மூழ்கித் தவித்தனர். காலப்போக்கில் பதினேழாம் - பதினெட்டாம் நூற்றாண்டுகளில் வணிகம் செய்வதற்காக இந்தியாவிற்கு வந்த ஐரோப்பியர்களை தொடர்ந்து ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றிய ஆங்கிலேயர்களால் 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கல்வியறிவு என்பது அனைத்து மக்களுக்கும் பொதுவானது என்ற பொதுவுடமை கோட்பாட்டின் அடிப்படையில் அனைத்து தரப்பு மக்களுக்கும் கல்விபயிலும் வாய்ப்பு கிட்டுகிற வகையில் பள்ளிக்கூடங்களையும், கல்லூரிகளையும் திறந்தார்கள்.

ஆனாலும், ஆங்கிலேய ஆட்சியில் "எல்லோருக்கும் கல்வி" என்றக் கோட்பாட்டை ஆரியர்கள் தங்களுடைய செல்வாக்கை பயன்படுத்தி சிதைக்கவும், தடுக்கவும் திசைமாற்றினர் என்பது கடந்தகால வரலாறாகும். ஆரியர்களின் இத்தகைய சூழ்ச்சியின் இன்னொரு வடிவம்தான் தமிழ்நாட்டின் மூதறிஞர் ராஜாஜி கொண்டு வந்த "குலக்கல்வி திட்டமாகும்".

தந்தை பெரியார் காங்கிரஸ் கட்சியில் பணியாற்றிய பொழுது காங்கிரஸ் தேசிய விடுதலை இயக்கம் என்று சொல்லப்பட்டாலும், அதில் ஆரியர்களின் அதிகாரம் தலை தூக்கியதோடு சனாதன கோட்பாடு கோலோச்சியதால் 1925 ஆம் ஆண்டு சுயமரியாதை இயக்கத்தை தொடங்கினார். அதன்மூலம் வர்ணாசிரமக் கோட்பாடுகள் தகர்த்து தரைமட்டமாக்கப்பட வேண்டும் என்று நாடு முழுக்க ஊர்ஊராகச் சென்று முழங்கினார். மேலும், இளைஞர்களை நோக்கி எந்தக் கருத்தையும் யார் சொன்னாலும் அப்படியே ஏற்றுக்கொள்வது மூட நம்பிக்கை. அந்தக் கருத்துக்கான காரணகாரியங்களை ஏன்? எதற்கு? எப்படி? என்பதற்கான விளக்கங்களை பெற்று ஏற்றுக்கொள்வதுதான் அறிவுடைமையாகும். அதுதான் பகுத்தறிவு என்று அறிவுரை வழங்கினார்.

அவருடைய இத்தகைய பகுத்தறிவு பிரச்சாரத்தால் லட்சக்கணக்கான இளைஞர்கள் தந்தை பெரியாரின் கொள்கைகளை ஏற்று சுயமரியாதை இயக்கத்தை பின்பற்றி, அவர் இட்ட கட்டளைகளை செயல்படுத்த தொடங்கினார்கள். இன்றைய நவீன தமிழகத்தின் அறிவியல் வளர்ச்சிக்காக தொடக்கப்புள்ளி வைத்து அகரம் தீட்டியவர் தந்தை பெரியாரும் அவரை அடியொற்றி வீருநடை போற்ற பகுத்தறிவாளர்கள்தான் என்பதை யாராலும் மறுக்க இயலாது. ஆம்! திராவிட இயக்கம்தான்!

இதனைத் தொடர்ந்து அடுத்தகட்டமாக 1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 15ஆம் நாள் இந்திய துணைக்கண்டம் விடுதலைபெற்ற போது காஞ்சிக் கருவூலம் பேரறிஞர் அண்ணாவிற்கும், ஈரோட்டுப் பகலவன் தந்தை பெரியாருக்கும் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டில் 1949ஆம் ஆண்டு



பொன். முத்துராமலிங்கம்,
முன்னாள் அமைச்சர்
கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர்

செப்டம்பர் திங்கள் 17ஆம் நாள் அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் என்கின்ற மகத்தான இயக்கத்தை தொடங்கினார். அதன்நோக்கம் பெரியாரின் கருத்துக்களுக்கும், சிந்தனைகளுக்கும் விடுதலைபெற்ற இந்தியாவின் ஜனநாயக ஆட்சிமுறையில் சட்டவடிவம் கொடுக்க வேண்டும் என்பதே மிக முக்கியமான நோக்கமாகும். இந்தச் சிந்தனையின் பிரதிபலிப்பாகத்தான் பேரறிஞர் அண்ணா 1967-ல் தமிழக முதலமைச்சராக ஆட்சிப்பொறுப்பிற்கு வந்தவுடன் தமிழர்களின் தன்மான பிரதிபலிப்பாக மூன்று அறிவிப்புகளை சட்டசபையில் நிறைவேற்றினார்.

1. சென்னை மாகாணம் என்பது "தமிழ் நாடு" என பெயர் மாற்றப்பட்டது.

2. சுயமரியாதைத் திருமணங்கள் சட்டப்படி செல்லுபடி ஆக்கப்பட்டது.

3. தமிழ்-ஆங்கிலம் என்ற இருமொழிக் கொள்கைதான் தமிழக அரசின் மொழிக் கொள்கை என வரையறுக்கப்பட்டது.

இந்த அறிவிப்பிற்கு முந்தைய காலக்கட்டத்தில் தந்தை பெரியார் வழியில், பேரறிஞர் அண்ணா வழியில், முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் "தமிழ்நாடு" என பெயர் மாற்றக்கோரி பலலட்சக்கணக்கான பல கோடி கணக்கான இளைஞர்கள் போராடினார்கள். உயிரை துச்சமென மதித்து களத்திலே நின்றார்கள், களப்பலிக்கு ஆளானார்கள். ஆரிய ஆதிக்கத்தால் முடைநாற்றம் வீசிய தமிழ்மண்ணை வீரியப் படுத்த இளைஞர்கள், மாணவர்கள் தங்கள் ரத்தத்தை தாரைவார்த்து தந்தார்கள் என்பது திராவிட இயக்கத்தின் நெடிய வரலாற்றில் ஓர் முக்கியமான மைல் கல்லாகும்.

அந்தக் காலத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் "காஞ்சி", "திராவிடநாடு" போன்ற ஏடுகளில் "தம்பிக்கு" என விழித்து நாட்டு நடப்பையும், உலக அரசியல் நிலவரங்களையும், கொள்கை கோட்பாடுகளையும் விளக்கி கடிதம் எழுதினார்கள். அதில், "தம்பி உடையான் படைக்கு அஞ்சான்", "இப்படை தோற்கின் எப்படை வெல்லும்" போன்ற முத்தாய்ப்பான வாசகங்கள் மூலம் இளைஞர்களை ஈர்த்தார். அதனால் தான் திராவிட முன்னேற்றக் கழகத்தை "அரசியல்கட்சி" என்று சொல்வதை விட தமிழினத்திற்கான ஓர் "அரசியல் இயக்கம்" என்று குறிப்பிட்டார். அவரைத் தொடர்ந்து முத்தமிழறிஞர் கலைஞர் பேரறிஞர் அண்ணா வழியில், முரசொலியில் தன்னுடைய கடிதத்தை "உடன்பிறப்பு" என்று எழுதத் தொடங்கினார். அதில் அவர் கையாண்ட உணர்ச்சிமிகுந்த சொல்லாட்சி படித்தவர்களையும், பாமரர்களையும் படிக்கத் தூண்டி கவர்ந்து இழுத்தது. இவ்வாறு பேரறிஞர் அண்ணா அவர்களும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் தங்களுடைய எழுத்தால், ஆற்றல்மிகுந்த பேச்சால், நாடகங்களால், திரைப்படங்களால் திராவிட இயக்கத்திற்கு இளைஞர்களையும் மற்றும் அடித்தட்டு மக்களையும் வெகுவாக ஈர்த்தனர். அதன்விளைவாக இளைஞர்களும், மாணவர்களும் இனம், மொழி, பண்பாடு, பகுத்தறிவு, ஜனநாயகம் போன்ற சமூக வாழ்க்கையின் அடித்தள சிந்தனைகளைச் சீர்தூக்கிப் பார்த்து அவற்றை நிலைநாட்டு வதிலும், பாதுகாப்பதிலும் பேரறிஞர் அண்ணாவிற்குப் பின்னால், முத்தமிழறிஞர் கலைஞருக்குப் பின்னால் திராவிட இயக்கத்திற்கு அணிதிரண்டனர் என்பது வரலாற்றின் திருப்புமுனையாகும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்த அடிப்படைக் கோட்பாடுகளை முன்னெடுப்பதற்கும் நிலைநிறுத்தி வெற்றிக்கொடி நாட்டுவதற்கும் நீதிமன்றத்தில் வாதாடுவதற்கும், மக்கள் மன்றத்தில் போராடுவதற்கும் முனைப்பாகவும் ஆயத்தமாகவும் உள்ளது என்பதை சமீபத்தில் கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் பசும்பொன்னில் தேவர் பெருமகனாருக்கு அஞ்சலி செலுத்தி விட்டு, பத்திரிக்கை ஊடகங்களைச் சந்தித்த போது அடக்குமுறைகளைக் கண்டு அஞ்ச மாட்டோம். நெருக்கடிகளை "மிசா", "தடா", "பொடா" போன்ற சட்டங்களை சந்தித்தவர்கள் நாங்கள் என்று உறுதிபடக் கூறினார்.

எனவே, இளைஞர்கள், மாணவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டு திராவிட இயக்க சிந்தனைகளையும், தங்கள் அறிவாற்றலையும் கூர்தீட்டி கடந்துவந்த வரலாற்று பாதையை திரும்பிப் பார்த்தும் தமிழ்நாட்டுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் தேவையான அறிவுப் பாசறை திராவிட முன்னேற்றக் கழகம் என்பதையும் அதன் தலைமையகம் "அண்ணா அறிவாலயம்" என்பதையும் பறைசாற்ற வேண்டும்.

ஏனெனில், மதவாத சனாதன சக்திகள் இணைந்து ஒன்றிய ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி தங்கள் திட்டங்களை பரவலாக்கி "ஒரே நாடு-ஒரே தேர்தல்" என்ற முயற்சியை மேற்கொண்டிருக்கும் இன்றையக் காலகட்டத்தில் தமிழ்நாட்டினுடைய நலன்களையும் தமிழ் மக்களின் கலை, கலாச்சாரம், நாகரிகம், பண்பாடு ஆகியவற்றை பாதுகாக்க உருவாக்கப்பட்ட உயிரோட்டமுள்ள இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை உணர வேண்டும்.

ஆம்! திராவிட முன்னேற்றக் கழகம் உலகம் உள்ளவரை தமிழினத்தின் அரணாகவும் அகழியாகவும் பயன்படும் நிரந்தரக் கட்டமைப்பாகும். அந்தவகையில் திராவிட முன்னேற்றக் கழகம் என்பது "திருவிழாக் காலங்களில் ஏற்றப்படும் அலங்கார விளக்குகள் அல்ல, மாறாக அறியாமை இருள் அகற்றி திராவிட மாடல் ஆட்சியின் என்றும் அணையாத அகல் விளக்காகும்" எதிர்கால தமிழினத்திற்கு திசைகாட்டும் கலங்கரை விளக்கமுமாகும் என்பதை உலகிற்கு உணர்த்த வாருங்கள் இளைஞர்களே! இயக்கத்தில் பணியாற்றிட, நம் இனம், மொழி காத்திட கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தலைமையில் அணிவகுப்போம்! அவர் காட்டும் திசையில் பணி முடிப்போம்!!

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(4.11.2026)

1. திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை அருகே நண்பர்களுக்குள் ஏற்பட்ட தகராறில் பிரபல ரவுடி சரமாரியாக வெட்டிக் கொலை ....



2. ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை அருகே மனநலம் பாதித்த வாலிபரை சரமாரியாக அடித்து கொலை செய்த ஐந்து பேர் சிக்கினர் ....

3. மதுரை மத்திய சிறையில் கைதியை கண்காணித்த போலீஸ்காரர் மீது சரமாரி தாக்குதல்....

4. திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை அருகே பதினாறு வயது சிறுமியிடம் ஆசை வார்த்தை கூறி பாலியல் சில்மிசத்தில் ஈடுபட்ட ஆட்டோ ஓட்டுனர் சிக்கினார் ...

5. சென்னை ஓட்டேரி அருகே பட்டாளம் பகுதியில் பானிப் பூரி கடை வியாபாரியை வழிமறித்து கத்தி முனையில் பணம் மற்றும் செல்போன் பறித்த இருவர் சிக்கினர் ....



6. சென்னை புளியந்தோப்பு அருகே வேலைக்குச் சென்று விட்டு திரும்பிய வட மாநில வாலிபரை வழிமறித்து கத்தி முனையில் வழிப்பறி செய்த இருவர் சிக்கினர்...

7. சென்னை ஆலந்தூர் அருகே மடுவங்கரை பகுதியில் உள்ள பெண்கள் தனியார் விடுதியில் 15 லட்ச ரூபாய் பணம் நூதன முறையில் மோசடி, பெண் சிக்கினார் ....

8. சென்னையை அடுத்த மாதவரம் ரவுண்டானா அருகே மீஞ்சூரில் இருந்து கோயம்பேடு வந்த மாநகரப் பேருந்து கண்ணாடியை உடைத்த ரவுடி. பயணிகள் அலறியடித்து ஓட்டம் ....

9.சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தி லிருந்து திருவனந்தபுரத்திற்கு செல்லும் எக்ஸ்பிரஸ் ரயில் மீது பெரம்பூர் அருகே சரமாரியாக கல்வீசிய மர்மநபர்கள், பயணிகள் பீதி ....

மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் - முன்னணியினர் பங்கேற்பு!

குன்னம் சி.இராஜேந்திரன் படத்திறப்பு நிகழ்ச்சி!

முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு - ஆ. இராசா எம். பி. புகழுரை!

பெரம்பலூர், நவ. 6 –

பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் தி மு.க. முன்னாள் மாவட்டச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரனின் திருஉருவப் படத் திறப்பு விழா நிகழ்ச்சி முத்துகிருஷ்ணா திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

முன்னாள் அமைச்சர் கே.என். நேரு, முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.இராசா.எம்.பி. உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பெரம்பலூர் முன்னாள் மாவட்ட கழகச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன் கடந்த மாதம் 7ஆம் தேதி உடல் நலக்குறைவால் காலமானார்.

அவரது திரு உருவப்பட திறப்பு விழா நிகழ்ச்சி முத்துகிருஷ்ணா தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.


இந்த நிகழ்ச்சியில் கழக முதன்மைச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான கே.என்.நேரு, கழக துணைப் பொதுச்செயலாளரும், மேனாள் ஒன்றிய அமைச்சருமான ஆ.இராசா.எம்.பி. ஆகியோர் கலந்து கொண்டு, மறைந்த குன்னம் சி.இராஜேந்திரன் உருவம் படத்தை திறந்து வைத்து, அவர் தி.மு.க. விற்காக செய்த அர்ப்பணிப்பு மற்றும் களப்பணிகள் குறித்தும், அவர் பொறுப்பில் இருந்த காலத்தில் தி.மு.க. சார்பில் நடத்தப்பட்ட பல்வேறு கட்ட போராட்டங்கள், கட்சியின் வளர்ச்சி குறித்தும் பேசினார்கள்.

முன்னாள் அமைச்சர் கே.என். நேரு பேசுகையில்,

தி.மு.க.வை காங்கிரஸ் எதிர்த்தது, பின்னர் காமராஜரர் தி.மு.க.வை எதிர்த்தார், அதற்குப் பிறகு எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா, எடப்பாடி பழனிச்சாமி இப்படி பலரும் எதிர்த்தார்கள், எதிர்த்தவர்கள் தான் மாறிக் கொண்டே உள்ளனர். ஆனால் தி.மு.க. என்றும் நிரந்தரமாக உள்ளது என பேசினார்.

இதில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா. துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப. பரமேஷ் குமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சயகோபால், வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், ந.ஜெகதீஷ்வரன், செ.அண்ணா துரை, பட்டுச்செல்வி ராஜேந்திரன், டி.கே. ராமச்சந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில்,சன்.சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன், ஒன்றியச் செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, எம்.ராஜ்குமார், செ.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், ஒன்றிய பொறுப்பாளர்கள் டாக்டர் செ.வல்லபன், அழகு.நீலமேகம், மாவட்ட அரசு குற்றவியல் வழக்கறிஞர் ப.செந்தில்நாதன், தொ.மு.ச. மு.ராஜகாந்தம், வேப்பந்தட்டை ஒன்றிய முன்னாள் பெருந்தலைவர் க.ராமலிங்கம், முன்னாள் துணை பெருந்தலைவர் எம்.ரெங்கராஜ், அரும்பாவூர் பேரூர் செயலாளர் ஆர்.ரவிச்சந்திரன், பூலாம்பாடி பேரூர் செயலாளர் செல்வலட்சுமி சேகர், லெப்பைக்குடிக்காடு பேரூர் செயலாளர் ஜாகிர் உசேன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன் (எ)ஹரிபாஸ்கர், துணை அமைப்பாளர்கள் டி.ஆர்.சிவசங்கர், அ.அப்துல்கரீம், வ.சுப்ரமணியன், ஆர்.அருண், மா.பிரபாகரன், தொ.மு.ச. மாவட்டக் கவுன்சில் பேரவை தலைவர் கே.கே. எம். குமார், தொ.மு.ச. கவுன்சில் பேரவை மாவட்ட செயலாளர் ஆர்.ரெங்கசாமி, மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கவிஞர் முத்தரசன், மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் பாரி (எ) அப்துல்பாரூக், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல், தலைமை கழக பேச்சாளர்கள் எசனை ஆறுமுகம், மு.விஜய ரத்தினம், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் தி.இராசா, மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம்.மணிவாசகம், வழக்கறிஞர் கண்ணன் மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஆர்.வேணுகோபால், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சு.தங்கராசு, மாவட்ட மகளிர் அணி அமைப்பா ளர் மகாதேவி ஜெயபால், தொழிலாளர் அணி அமைப்பாளர் ஆர்.முருகே சன், மாவட்ட மகளிர் அணி விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வெ.கார்மேகம், மற்றும் குன்னம் சி.இராஜேந்திரன் குடும்பத்தினர் களான மனைவி ரா.ராமதிலகம், மகன்கள், மருமகள்கள் ரா. செந்தில்நாதன், அமுதா, ரா.வெற்றிவேல் விஜயபிரியா, ரமேஷ் ராஜேந்திரன் சந்திரலேகா உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்யா; அரசுப் பள்ளி மாணவர்களுக்குப் பிரியாணி போடும் வரை சைவமாகவே இருக்க அமைச்சர் ராஜ்மோகன் உறுதி எடுத்திருக்காருன்னு அவரது 'யோக்கிய' நண்பர் மணி சொல்லி இருக்காரே!. உறுதியா இருப்பாரா?

போண்டி : **ஆமாய்யா; அதுல உறுதியா இருந்து என்ன பிரயோஜனம்? அந்த '5 கோடி ரூபாய்' விவகாரத்தில யார் லஞ்சம் கொடுக்க முன் வந்தாங்கன்னு சொல்லாம இருக்கிறதிலேயும் உறுதியா இருக்காரே ராஜ் மோகன்! அது சரியா?**